178299

கும்பகோணம் க்ஷேத்திர புராணம்

தேவாரம் + திருவாய்மொழி

O23:38·2(143)
N33
178299


715

1715

கும்பகோணம் க்ஷேத்திர புராணம்

# தேவாரம் & திருவாய்மொழி.

24 MAR 19



மங்களாம்பிகை அண்டு கோ.,

வியாபாரம், கும்பகோணம்.

கும்பகோணம்

...ல் பதிப்பிக்கப்பட்டது.

1933. அணா 4.

178299

பித்தளைப்பாத்திரங்கள்! நயமான விலைகள்!!

எங்களிடம் சகலவிதமான பித்தளை வெங்கலபாத்திரங்கள் விலைசரசமாயும் சுத்தமாகவும் கிடைக்கும். ஆலயங்கள், சத்திரங்கள், ஹோட்டல்கள், ஹாஸ்ட்டல்களுக்கு வேண்டிய சாமான்கள் ஆர்டரின்பேரில் வேலை சுத்தமாகவும் குறைந்த ரேட்டில் இஷ்டப்பிரகாரம் குறித்த டயத்தில் செய்து கொடுக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கும் வேண்டிய ரகங்கள் சப்ளை செய்யப்படும்.

உ. ச. ருமலிங்கம் செட்டியார்,
பித்தளை பாத்திர வியாபாரம்,
பேட்டை காணயக்காரத்தெரு,
கும்பகோணம்.

---

ரங்கூன் வைரம் புதிய வைரம்.

விலை சரஸம்.


பார்வைக்கு சிமைக்கமலம் போலிருக்கும்.

எங்களிடம் ரங்கூன் வைரத்தினால் செய்யப்பட்ட தோடுகள், டோலக்குகள், மூக்குத்திகள் முதலியவைகளும், கடுக்கன் வகைகளும், உத்திரவாதமுள்ளதாக ரெடிமேடிலும், ஆர்டரின்பேரில் குறித்த காலத்துக்குள் செய்து கொடுக்கப்படும் உதிரி கமலங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும். தங்க நகைகளும், வெள்ளிப்பாத்திரங்களும் ஆர்டரின் பேரில் செய்து கொடுக்கப்படும்.

ஒரு தடவை பரீக்ஷித்துப்பாருங்கள்.

V. V. தனபால செட்டியார்,
ஷராப்கடை, டைமண்ட் வியாபாரம்,
பெரியகடைத்தெரு, கும்பகோணம்.


24 MAR 1933



ஸ்ரீ ஜகத்குரு.

மானிடராய்ப்பிறந்த ஒருவன் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், இத்தியாதி மாயை அவதாரங்களை பூஜித்து பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்ற பஞ்சபூதங்களையும் ஒருங்கே ஏகாக்ரகசித்தத்தில் நிறுத்தி பிரணவ ரூபமாகிய ஓங்கார ஸ்வரூபத்தைத் தியானித்தால் சாயுஜ்ய பொருளை அடைகிறான் அதுதான் அத்வைதம் அவ்வத்வைத ஸ்தாபகரே நமது ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், இவரை வணங்கிஇப்புத்தகத்தை ஆரம்பிக்கிறோம்.

128299
575
294.535

திருச்சிற்றம்பலம்.

## ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் பாடியது.

— பண் —

கோட்டங்கொண்டார் குடமூக்கிலுங் கோவலுங் கோதிட்டையும்
வேட்டங்கொண்டார் வெண்ணெய் நல்லூரில்வைத்தென்னை யாளுங்கொண்டார்
ஆட்டங்கொண்டார் தில்லைச்சிற்றம்பலத்தே யருக்கனைமுன்
நாட்டங்கொண்டார்க்கிடமாவது நந்திருநாவலூரே. 6.

ஆறாவது பாசுரம்.

---

பலவகை திருத்தாண்டகம்.

## திருநாவுக்கரசுசுவாமிகள் பாடியது.

விடமூக்கப்பாம்பே போற்சிந்திநெஞ்சே
வெள்ளேற்றான்தன் தமரைக்கண்டபோது
வடமூக்கமாமுனிவர்போலச்சென்று
மாதவத்தார்மனத்துளார் மழுவாட்செல்வர்
படமூக்கப்பாம்பணையிற் பள்ளியானும்
பங்கயத்துமேலயனும் பரவிக்காணக்
குடமூக்கே குடமூக்கே யென்பீராகிற்
கொடுவினைகள் தீர்த்தானைக் கூடலாமே.

(1) மேற்கூறிய எல்லா ஆச்சரியங்களை காட்டிலும் விசேஷமான ஓர் அற்புதம் கும்பகோணத்தில் ஏற்படுகிறது. இங்கு பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை, தேவகுருவாகிய பிரஹஸ்பதி பகவான் சிங்கராசியிலும் சூரியன் கும்பராசியிலும், சந்திரன் குருவுடன் ஸிம்ஹத்தில் சேரும் மக நட்சத்திரம் பொருந்திய பௌர்ணமிதினம், மகாமக புண்ணியகாலம் ஏற்படுகிறது. அப்பொழுது இங்குள்ள கன்னியா தீர்த்தத்தில் நீராடுபவர்களுடைய பாவக்கூட்டங்கள் சூரியனைக்கண்ட பனிபோலும், அக்கினியைக்கண்ட பஞ்சுமூட்டை போலும் நாசத்தை அடைகின்றன. அநேக அசுவமேத யாகங்கள் செய்த பலனை கொடுப்பதுடன்கூட ஈசுவர ஸாயுஜ்ய பதவியையும் அளிக்கின்றது. இப்புண்ணிய பூமியின் பெருமையை மஹரிஷிகள் காசிகாண்டத்தில் பின்வருமாறு புகழ்ந்திருக்கிறார்கள்.

அன்யக்ஷேத்ரே க்ருதம் பாபம் புண்யக்ஷேத்ரே விநச்யதி!
புண்ய க்ஷேத்ரே க்ருதம் பாபம் வாராணஸ்யாம் விநச்யதி!!
வாராணஸ்யாம் க்ருதம் பாபம் கும்பகோணே விநச்யதி!
கும்பகோணே க்ருதம் பாபம் கும்பகோணே விநச்யதி!!

என்று கூறப்படுகிறது.





உ

சிவமயம்.

# திருக்குடமூக்கு பண்-பஞ்சமம்.

## திருஞானசம்பந்தர் பாடியது.

திருச்சிற்றம்பலம்,

1 அரவிரிகோடனீடலணி காவிரியார்த்தயலே
மரவிரிபோதும் மவ்வன் மணமல்லிகை கள்ளவிழுங்
குரவிரிசோலை சூழ்ந்த குழகன் குடமூக்கிடமா
யிரவிரி திங்கள் சூடி யிருந்தானவனெம் மிறையே.

2 ஒத்தரவங்களோடு மொலி காவிரி யார்த்தயலே
பூத்தரவங்களோடும் புகைக்கொண்டடி போற்றிநல்ல
கூத்தரவங்களோ வாக்குழகன் குடமூக்கிடமா
யேத்தரவங்கள் செய்ய விருந்தானவனெம் மிறையே

3 மயில்பெடைபுல்கியாட மறைமேல் மடவன்னமல்கும்
பயில்பெடைவண்டு பண்செய் பழங்காவிரிப் பைம்
பொழில்வாய்க்
குயில்பெடையோடு பாடலுடையான் குடமூக்கிடமா
யியலொடு வானமேத்த விருந்தான வனெம் மிறையே

4 மிக்கரைதாழ வேங்கையுரியார்த்து மையாள் வெருவ
வக்கர வாமையேன மருப்போடவை பூண்டழகோர்
கொக்கரையோடு பாடலுடையான் குடமூக்கிடமா
யெக்கரை யாருமேத்த விருந்தான வனெம் மிறையே

5 வடிவுடைவாட்டங்கண் ணுமையஞ்சவோர்வாரணத்தைப்
பொடியணிமேனி மூடவுரி கொண்டவன்புன் சடையான்
கொடிநெடுமாட மோங்கும் குழகன் குடமூக்கிடமா
யிடிபடுவானமேத்த விருந்தானவனெம் மிறையே.

6 கழைவளர்கவ்வை முத்தங்கமழ் காவிரியார்த்தயலே
தழைவளர் மாவினல்ல பலவின் கனிகடமங்கு
குழைவளர்சோலை சூழ்ந்த குழகன் குடமூக்கிடமா
விழைவளர்மங்கையோடு மிருந்தான வனெம் மிறையே

7 மலைமலிமங்கை பாகம் மகிழ்ந்தானெழில் வைய முய்யச்
சிலைமலிவெங்கணையாற் சிதைத்தான் புர மூன்றினையுங்
குலைமலிதண் பலவின்பழம் வீழ்குட மூக்கிடமா
விலைமலி சூலமேந்தியிருந்தான வனெம் மிறையே.

8 நெடுமுடிபத்துடைய நிகழ்வாளரக்கன் னுடலைப்
படுமிடர் கண்டபரப்பருமால் வரைக் கீழடர்த்தான்
கொடுமடறங்கு தெங்குபழம் வீழ்குட மூக்கிடமா
விடுமண லெக்கர் சூழவிருந்தானவ னெம்மிறையே

9 ஆரெரி யாழியானு மலரானு மளப்பரிய
நீரிரிபுன் சடைமேனிரம்பா மதிசூடிநல்ல
கூரெரியாகி நீண்ட குழகன் குடமூக்கிடமா
வீரிரு கோவணத்தோடிருந்தான வனெம் மிறையே

10 மூடிய சீவரத்தார் முதுமட்டையர் மோட்டமணர்
நாடிய தேவரெல்லா நயந்தேத்திய நன்னலத்தான்
கூடிய குன்றமெல்லா முடையான் குடமூக்கிடமா
வேடலர் கொன்றை சூடி யிருந்தானவ னெம்மிறையே



1 வெண் கொடிமாட மோங்குவிறல் வெங்குரு நன்னகரா
னண்பொடு நின்ற சீரான்றமிழ்ஞான சம்பந்தனல்ல
தண் குடமூக்கமர்ந்தானடி சேர்தமிழ் பத்தும் வல்லார்
விண்புடைமேலுலகம் வியப் பெய்துவர் வீடெளிதே

திருச்சிற்றம்பலம்



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய

## திருக்குடமூக்கு

## திருக்குறுந் தொகை

பூவனத்தவன் புண்ணியனண் ணியங்
காவனத் துடையா னடியார் களைத்
தீவனத் திருநீறு மெய்பூசி யோர்
கோவணத் துடையான் குடமூக்கிலே

2 பூத்தாடிக் கழியாதே நீர் பூமியீர்
தீத்தாடித் திறஞ் சிந்தையுள் வைம்மினோ
வேர்த்தாடுங் காளிதன் விசைதீர் கென்று
கூத்தாடி யுறையுங் குட மூக்கிலே

3 நங்கையாளுமை யாளுறை நாதனை
ரங்கையாளொடறு பதந்தாழ் சடைக்
கங்கை யாளவள் கன்னியெனப்படுங்
கொங்கை யாளுறையுங் குடமூக்கிலே

4 ஓதாநாவன் திறத்தை யுரைத்திரே
லேதானு மினிதாகு மியமுனைச்
சேதா வேறுடையான மர்ந்தவிடங்
கோதாவிரி யுறையுங் குடமூக்கிலே

5 நக்கரையனை நாடொறு நன் னெஞ்சே
வக்கரை யுறைவானை வணங்குநீ
யக்கரை யோடரவரை யார்த்தவன்
கொக்கரை யுடையான் குடமூக்கிலே

6 துறவி நெஞ்சினராகிய தொண்டர்காள்
பிறவிநீங்கப் பிதற்றுமின் பித்தராய்
மறவனாய்ப் பார்த்தன் மேற்கணை தொட்டவெங்
குறவனா ருறையுங் குடமூக்கிலே

7 தொண்டராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்டவர் புரமூன்றொரு மாத்திரைக்
கொண்டவ னுறையுங் குடமூக்கிலே

8 காமியஞ் செய்து காலங் கழியாதே
யோமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமியோடு சரச்சுவதி யவள்
கோமியு முறையுங் குடமூக்கிலே



9 சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரமனைப் பலநாளும் பயிற்றுமின்
பிரமன் மாலொடு மற்றொழிந்தார்க் கெலாங்
குரவனா ருறையுங் குடமூக்கிலே

10 அன்று தானரக்கன் கயிலாயத்தைச்
சென்று தானெடுக்க வுமையஞ்சலு
நன்று தானக்கு நல்விர லூன்றிப்பின்
கொன்றுகீதங் கேட்டான் குடமூக்கிலே

திருச்சிற்றம்பலம்

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிய

# திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்

## திருத்தாண்டகம்

1 சொன்மலிந்த மறைநான்கா றங்கமாகிச் சொற்பொருளுங்
கடந்த சுடர்ச்சோதிபோலுங்
கன்மலிந்த கயிலைமலைவாணர்போலுங் கடனஞ்சமுண்டி
ருண்டகண்டர் போலு
மன்மலிந்த மணிவரைத்திண் டோளர்போலுமலையரை
யன்மடப்பாவை மணாளர் போலுங்
கொன்மலிந்த மூவிலைவேற்குழகர் போலுங் குடந்தைக்
கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே

2 கானவிளங் கலிமறவனாகிப் பார்த்தன் கருத்தளவு செருத்
தொகுதிகண்டார் போலும்
ஆனவிளங் கடுவிடையொன்றேறியண் டத்தப்பாலும்
பலிதிரியுமழகர் போலுங்

தேனமர்ந்த வயலமர்தென்றல் முன்றிற் செழும்பொ
ழிற் பூம்பாளைவிரிதேறனுறங்
கூனலிளம் பிறைதடவு கொடிகொண்மாடக் குடந்தைக்
கீழ்க்கோட்டத்தெங் கூத்தனாரே

3 நீறலைத்த திருவுருவு நெற்றிக்கண்ணு நிலாவலைத்த பாம்பி
னொடு நிறைநீர்க் கங்கை
யாறலைத்த சடைமுடியுமம் பொற்றோளு மடியவர்க்குங்
காட்டியருள்புரிவார் போலும்
ஏறலைத்த நிமிர்கொடியொன் றுடையார் போலுமேழுலகுந்
தொழுகழலெம்மீசர் போலுங்
கூறலைத்த மலைமடந்தைகொழுநர்போலுங் குடந்தைக்
கீழ்க்கோட்டத்தெங் கூத்தனாரே

4 தக்கனது பெருவேள்விதகர்த்தார் போலுஞ் சந்திரனைக்
கலைத்தார் கவர்ந்து தவிர்த்தார்போலுஞ்
செக்கரொளிபவளவொளிமின்னின்சோதிசெழுஞ்சுடர்த்
தீநாயிறெனச்செய்யர் போலு
மிக்கதிறன் மறையவரால் விளங்குவேள்வி மிகுபுகை
போய்விண்பொழியக்கழனி யெல்லாங்
கொக்கினிய கனிசிதறித் தேறல்பாயுங் குடந்தைக்
கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே

5 காலன்வலிதொலைத்த கழற்காலர்போலுங் காமனெழி
லழல்விழுங்கக் கண்டார் போலும்
ஆலதனிலறநால்வர்க்களித்தார் போலுமாணொடுபெண்
ணலியல்லானார் போலும்
நீலவுருவயிரநிரை பச்சைசெம்பொன் னெடும்பளிங்
கென்றறிவரியதிறத்தார் போலும்
கோலமணி கொழித் திழியும் பொன்னிநன்னீர்க்
குடந்தைக் கீழ்க்கோட்டத்தெங் கூத்தனாரே

6 முடிகொண்டவளர் மதியுமூன்றாய்த் தோன்று மூன்
நாயிறன்னமலர்க் கண்கண்மூன்று
மடிகொண்டசிலம் பொலியும் அருளார் சோதியணிமுறு
வற்செவ்வாயுமழகாய்த் தோன்றத்



துடிகொண்ட விடைமடவாள் பாகங்கொண்டு சுடர்ச்
சோதிக்கடற் செம்பொன் மலைபோலிந்நாட்
குடிகொண்டென் மனத்தகத்தே புகுந்தார் போலுங்
குடந்தைக் கீழ்க்கோட்டத்தெங் கூத்தனாரே

7 காரிலங்குதிருவுருவத்தவற்குமற்றைக் கமலத்திற் காரண
ற்குங்காட்சியுண்ணாச்
சீரிலங்குதழற் பிழம்பிற் சிவந்தார் போலுஞ்சிலைவளைவித்
தவுணர் புரஞ்சிதைத்தார் போலும்
பாரிலங்கு புனலனல்கால்பரமாகாசம் பருதிமதிசுருதியு
மாய்ப் பரந்தார்போலுங்
கூரிலங்குவேற் குமரன்றாதை போலுங் குடந்தைக்
கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே

8 பூச்சூழ்ந்த பொழிறழுவுபுக லூருள்ளார் புறம்பத்தா
றம்புரிபூந்துருத்திபுக்கு
மாச்சூழ்ந்த பழனத்தார் நெய்த்தானத்தார் மாதவத்து
வளர் சோற்றுத் துறையார்நல்ல
தீச்சூழ்ந்த திகிரிதிருமாலுக்கீந்து திருவானைக்
காவிலோர் சிலந்திக்கந்நாட்
கோச்சோழர்குலத்தரசு கொடுத்தார் போலுங் குடந்தைக்
கீழ்க்கோட்டத்தெங் கூத்தனாரே

9 பொங்கரவர் புலித்தோலர் புராணர் மார்பிற்பொறிகிளர்
வெண்பூணநூற் புனிதர் போலுஞ்
சங்கரவக்கடன முகடுதட்ட விட்டெச்சதுர நடமாட்டுகந்த
சைவர் போலும்
அங்கரவத்திருவடிக் காட்பிழைப்பத்தந்தை யந்தணலையற
வெறிந்தார்க்கருளப் போதே
கொங்கரவச் சடைக்கொன்றை கொடுத்தார் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத் தெங்கூத்தனாரே

10 ஏவியிடர்க்கடலிடைப் பட்டிளைக்கின்றேனை யிப்பிறவி
யறுத்தேறவாங்கி யாங்கே
கூவிமலருலகனைத்து முருவிப்போகக் குறியிலறுகுணத்
தாண்டுகொண்டார் போலுந்

தாவிமுதற் காவிரிநல் யமுனைகங்கை சரசுவதிபொற்றா
மரைபுட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவருதீர்த்தஞ் சூழ்ந்த குடந்தைக்
கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே

11 செறிகொண்ட சிந்தைதனுட் டெளிந்து தேறித் தித்திக்
குஞ்சிவபலனத்த முதம் போலு
நெறிகொண்ட குழலியுமைபாகமாக நிறைந்தமரர்கணம்
வணங்கநின்றார் போலு
மறிகொண்ட கரதலத்தெம்மைந்தர் போலு மதிலிலங்
கைக் கோன்மலங்கவரைக் கீழிட்டுக்
குறிகொண்ட வின்னிசைகேட்டு கந்தார்போலுங்
குடந்தைக் கீழ்க்கோட்டத்தெங் கூத்தனாரே

திருச்சிற்றம்பலம்.

---

உ

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தசுவாமிகள்பாடிய

## திருக்குடந்தைக் காரோணம் பண் தக்கேசி

1 வாரார்கொங்கைமாதோர் பாகமாகவார்சடை
நீரார் கங்கைதிங்கள் சூடிநெற்றி யொற்றைக்கண்
கூரார் மழுவொன்றேந்தியந்தண் குழகன் குடமூக்கிற்
காரார்கண்டத் தெண்டோளெந்தை காரோணத்தாரே

2 முடியார் மன்னர் மடமான்விழியார் மூவுலகும்மேத்தும்
படியார் பவளவாயார் பலரும்பரவிப் பணிந்தேத்தக்
கொடியார் விடையார் மாடவீதிக்குடந்தை குழகாருங்
கடியார் சோலைக்கலவமயிலார் காரோணத்தாரே

3 மலையார் மங்கைபங்கரங்கையனலர் மடலாருங்
குலையார் தெங்கு குளிர்கொள்வாழையழகார் குடமூக்கின்



முலையாரணிபொன் முளைவெண்ணகையார் மூவாமதி
யினார்
கலையார் மொழியார் காதல்செய்யுங் காரோணத்தாரே.

4 போதார்புனல்சேர்கந்தமுந்திப் பொலியவழகாருந்
தாதார்பொழில்சூழ்ந்தெழிலார்புறவிலந்தண் குடமூக்கில்
மாதார் மங்கைபாகமாக மனைகள் பலிதேர்வார்
காதார் குழையர்காள கண்டர் காரோணத்தாரே.

5 பூவார் பொய்கையலர்தாமரை செங்கழுநீர் புறவெல்லாந்
தேவார் சிந்தையந்தணாளர் சீராளடிபோற்றக்
கூவார் குயில்களாலு மயில்களின் சொற்கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ்ந்தழகார் குடந்தைக்காரோணத்தா
[ரே.

6 மூப்பூர்நலியநெதியார் விதியாய் முன்னேயனல்வாளி
கோப்பார்பார்த்தனிலை னிலைகண்டருளுங் குழகர்
குடமூக்கிற்
தீர்ப்பாருடலில டுநோயவலம் வினைகணலியாமைக்
காப்பார் காலனடையாவண்ணங் காரோணத்தாரே.

7 ஊனார்தலைகையேந்தி யுலகம் பலிதேர்ந்துழல் வாழ்க்கை
மானார் தோலார்புலியினுடையார் கரியினுரிபோர்வை
தேனார்மொழியார் திளைத்தங்காடித்திகழுங் குடமூக்கிற்
கானார் நட்டமுடையார் செல்வக்காரோணத்தாரே.

8 வரையார்திரடோள் மதவாளரக்கனெடுப்பமலை சேரும்
விரையார்பாதநுதியாலூன்ற நெரிந்து சிரம்பத்து
முரையார்கீதம்பாடக்கேட்டங்களிவாள் கொடுத்தருளுங்
கரையார் பொன்னிசூழ்ந்தண் குடந்தைக்காரோணத்
தாரே.

9 கரியமாலுஞ்செய்ய பூமேலயனுங்கழறிப்போ
யரியவண்டந் தேடிப்புக்குமளக்க வொண்கிலார்
தெரியவரியதேவர் செல்வந்திகழுங் குடமூக்கிற்
கரியகண்டர் காலகாலர் காரோணத்தாரே.

10 நாணாமமணர்கல்லதறியார் நாளுங் குரத்திகள்.
பேணார்தூய்மை மாசுகழியார் பேசேலவரோடுஞ்
சேணார்மதிதோய் மாடமல்குசெல்வ நெடுவீதிக்
கோணாக்ரமென் றுடையார் குடந்தைக்காரோணத்தாரே.

11 கருவார்பொழில்சூழ்ந்தழகார் செல்வக்காரோணத்தா
ரைத்
திருவார்செல்வ மல்குசண்பைத் திகழும்சம்பந்த
னுருவார்செஞ்சொன்மாலை யிவைபத்துரைப்பாருலகத்
கருவாரிடும்பைப்பிறப்பதறுத்துக்கவலைகழிவாரே. [துக்

திருச்சிற்றம்பலம்.

---

## அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ்.
## ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர்.

இந்துகதிர்ச் சேரருணப் பந்திநடுத் தானொளிபட்
டின்பரசப் பாலமுதச் சுவைமேவும்

எண்குணமுற் றோனடனச் சக்ரவொளிப் பீடகமுற்
றெந்தைநடித் தாடுமணிச் சபையூடே

கந்தமெழுத் தோடுறுசிற் செந்தமணப் பூவிதழைக்
கண்டுகளித் தேயமுதக் . கடல் மூழ்கிக்

கந்தமதித் தாயிரவெட் டண்டமதைக் கோல்புவனக்
கண்டமதைக் காணவெனக் கருள்வாயே



திந்ததிமித் திதகுடட் டுண்டுமிடட் டாடுடுடிட்
டிந்தமெனக் காளமணித் தவிலோசை

சிந்தைதிகைத் தேழுகடற் பொங்கவரிச் சூர்மகுடச்
செண்டுகுலைத் தாடுமணிக் கதிர்வேலா

குந்தியரித் தாழ்துளபச் செந்திருவைச் சேர்களபக்
கொண்டல்நிறத் தோள்மகளைத் தரைமீதே

கும்பிடுகைப் பூவிலெடுத் தம்பொனுரத் தோடணைகக்
கும்பகோணத் தாறுமுகப் பெருமாளே (1)

தும்பிமுகத் தானைபணைக் கொம்பதெனத் தாவிமயற்
றொர்ந்தமெனப் பாயுமுலைக் கனமாதர்

தும்பிமலர்ச் சோலைமுகிற் கங்குலிருட் காரினிறத்
தொங்கல்மயிற் சாயலெனக் குழல்மேவிச்

செம்பொனுருக் கானமொழிச் சங்கிலொளிக் காமநகைச்
செங்கயலைப் போலும்விழிக் கணையாலே

சிந்தைதகர்த் தாளுமிதச் சந்த்ரமுகப் பாவையர்தித்
திந்திமெனுற் றுடுவர்க் குழல்வேனோ

தம்பிவாச் சானகிபொற் கொம்புவரக் கூடவனச்
சந்தமயிற் றுய்விலகிச் சிறைபோகச்

சண்டர்முடித் தூள்கள்படச் சிந்தியரக் கோர்கள்விழத்
தங்கநிறத் தாள் சிறையைச் தவிர்மாயோன்

கொப்புகுறிக் காளமடுத் திந்தமெனுற் றுடிகிறைக்
கொண்டுவனைத் தேமகிழச் சுதனீனக்

கொஞ்சுசுகப் பாவையிணைக் கொங்கைதனிற் றுவிமகிழக்
கும்பகோணத் தாறுமுகப் பெருமாளே (2)

கெண்டைநே ரொத்தவிழி மங்கைமோகக்கலவை
கெந்தவாசப் புனுகு மணநாறும்

கிம்புரீசக் களப கொங்கைரூ பப்பொலிவு
கிஞ்சுகாணப் பெருகி அடியேனும்

மண்டிமோ சக்கலவி கொண்டுகா மித்துருகி
வண்டனு கப்புவியில் உழலாமல்

வந்துஞானப்பொருளி லொன்றுபோ தித்தனது
மஞ்சு தாளைத்தினமும் அருள்வாயே

அண்டர்வா ழப்பிரபை சண்டமே ருக்கிரிய
ளைந்துவீ ழப்பொருத கதிர்வேலா

அஞ்சுவர் யிற்பரனை நெஞ்சிலூ றித்தவசி
னன்புளா ரைச்சிறையி டசுரோரைக்

கொண்டுபோய் வைத்தகழு நெஞ்சிலே றக்கழுகு
கொந்தியா டத்தலையை அரிவோனே

கொண்டல்கு ழக்கழனி சங்குலா விப்பரவு
கும்பகோணத்திலுறை பெருமாளே (3)

பஞ்சுசேர்நிர்த்தப்பதமாதர்பங்கமார் தொக்கிற்படியாமல்
செஞ்சொல்சேர் சித்ரத்தமிழா லுன்செம்பொனு
வத்தைப் பெறுவேனோ

பஞ்சபாணத்தற் பொருதேவர் பங்கில்வாழ் சத்திக் கும
ரேசா



குஞ்சரீ வெற்புத் தனநேயா கும்பகோணத்திற்
பெருமாளே (4)

மாலைதனில் வந்து வீதிதனில் நின்று
வாசமலர் சிந்து குழல்கோதி

வாரிகுத னங்கள் பூணொடுகு லுங்க
மால்பெருகிநின்ற மடவாரைச்

சாலைவழி வந்து போமவர்க ணின்று
தாழ்குழல்கள் கண்டு தடுமாறித்

தாகமயல் கொண்டு மாலிருளழுந்தி
சால மிகு நொந்து தவியாமல்

காலையிலெழுந்து நமமெமொழிந்து
காதலுமை மைந்த எனவோதிக்

காலமு முணர்ந்து ஞானவெளி கண்கள்
காண அருளென்று பெறுவேனோ

கோலமுடனன்று சூர்படையின் முன்பு
கோபமுட னின்ற முருகேசா

கோதையிரு பங்கின் மேவவளர் கும்ப
கோணநகர் வந்த பெருமாளே (5)

## ஸ்ரீ நாகேஸ்வரர்.

கறுத்த குஞ்சியும் வெளிறியெ ழுங்கொத்
துருத்த வெண்பலு மடையவி ழுந்தட்
கருத்து டன்திகழ் மதியும ருண்டுச்—சுருள்போயல்

கலக்கமுண்டல மலமுற வெண்டிப்
பழுத் தெழும்பிய முதுகுமுடங்கக்
கழுத்தில் வந்திளை யிருமலொதுங்கக்—கொழுமேனி

அறத்தி ரங்கியொர் தடிகைநடுங்கப்
பிடித் திடும்புற மனைவியு நிந்தித்
தடித்த மைந்தரும் வசைகள் விளம்பச்—சடமாகி

அழுக்க டைந்திடர் படுமுடல் பங்கப்
பிறப்பெ னுங்கட லழியலொ ழிந்திட்
டடுத்தி ருந்திரு வடிதனை யென்றுற்—றிடுவேனோ

புறத்த லம்பொடி படமிக வுங்கட்
டறப்பெ ருங்கடல் வயிறுகு ழம்பப்
புகட்ட ரங்கிய விரகது ரங்கத் — தீரல்வீரா

பொருப்பு ரம்படர் கிழிபட வென்றட்
டரக்கர் வன்தலை நெரிய நெருங்கிப்
புதைக்குறுந்தசை குருதிகள் பொங்கப்-பொரும்வேலா

சிறுத்த தண்டைய மதலையொ ரஞ்சச்
சினத்து மிஞ்சரி திரிதரு குன்றத்
தினைப்பு னந்திகழ் குறமகள் கொங்கைக்—கிரிமேவிச்

செருக்கு நெஞ்சுடை முருகசி கண்டிப்
பரிச்சு மந்திடு குமரக டம்பத்
திருக்குடந்தையி லுறைதருகந்தப் — பெருமாளே (1

செனித்தி டுஞ்சல சாழலு மூழலும்
வினைத்தி டுங்குடல் பீறியு மீறிய
செருக்கொ டுஞ்சதை பீளையு மீறிய—உடலூடே



தெளித் திடும்பல சாதியும் வாதியும்
இரைத்தி டுங்குல மேசில காலபடர்
சினத்தி டும்பவ நோயென வேயிதை— யனைவோரும்

கனைத்தி டுங்கலி காலமி தோவென
வெடுத்தி டுஞ்சுடு காடுபு காவென
கவிழ்த்தி டுஞ்சட மோபொடி யாய்விடும்-உடல்பேணிக்

கடுக்கனுஞ்சில பூடரை மாடைகள்
இறுக்கி டுங்கலை யேபல வாசைகள்
கழித்தி டுஞ்சிவ யோகமு ஞானமும்—அருள்வாயே

தனத்த னந்தன தானன தானன
திமித்தி திந்திமி தீதக தோதக
தகுத்து துந்துமி தாரைவி ராணமொ—டடல்பேரி

சமத்த மொன்றிய தானவர் சேனையை
வளைத்து வெஞ்சின வேல்விடு சேவக
சமித்து ணர்ந்திடு மாதவர் பாலருள்—புரிவோனே

தினைப்பு னந்தனி லேமய லாலொரு
மயிற்ப தந்தனி லேசர ணென்னை
திருப்பு யந்தரு மோகன மானினை—அணைவோனே

சிவக்கொழுஞ்சட ரேபரஞகிய
தவத்தில் வந்தருள் யிலக்கு பாகர
திருக்குடந்தையில் வாழ்முரு கேசப்—பெருமாளே (2)

---

## ஸ்ரீசோமேசர்.

கரியகுழல் சரியமுகம் வேர்வாட வாசமுறு
களபமுலை புகைமெழ நேரான வேல்விழிகள்
கயல்பொருது செயலதென நீள்பூச லாடகல—தனியா
யின்

கமழ்குழுத அதரவிதழ் தேனூறல் பாயமிகு
உடலுழுத முதவியிரு தோள்மாலை தாழவளை
கலகலென மொழிபதற மாமோக காதலது—கரைகாணு

தெரியனுகு மெழுகுபத மாய்மேவி மேவியிணை
யிருவருட லொருவரென நாளுநு பாயல்மிசை
இணமகளிர் கலவிதனி லேமூழ்கி யாழுகினு—மிமையாதே

இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இமையுமு னழகுபுனை யீராறு தோள்நிரையும்
இருபதமுமறு முகமும் யானுதை ஞானமதை—யருள்
வாயே

உரியதவ நெறியில்நம நாராய ணாயவென
ஒருமதலை மொழியளவி லோராத கோபமுட
னுனதிறைவ னெதனிலுள னோதாயடா வெனுமுன்—உறு
தூணில்

உரமுடைய அரிவடிவ தாய்மோதி வீழவிரா
லுகிர் புதைய இரணியனை மார்பீறி வாகபுனை
உவணபதி நெடியவனும் வேதாவும் நான்மறையும்—உயர்
வாக

வரியளிக ளிசைமுரல வாகான தோகையிள
மயிலிடையில் நடனமிட ஆகாச மூடுருவ
வளர்கமுகின் விரிகுலைகள் பூணார மாகியிட—மதில்சூழும்

மருதரசர் படைவிடுதி வீடாக நாடிமிக
மழவிடையின் மிசையிவரு சோமீசர் கோயில்தனில்
மகிழ்வுபெற உறைமுருக னேபேறுவானவர்கள்—
பெருமாளே (1)

முற்றிற்று.

---



## பெரியபுராணச் செய்யுள்.

போற்றிசைத்துப் புனிதரருள் பெற்றுப்போய் தெவ்வுயிரும்
தோற்றுவித்த வயன்போற்றுந் தோணிபுரத் தந்தணனா
ரேற்றுமிசை யேற்றுகந்த விறைவர்தமை யேத்துதற்கு
நாற்றிசையோர் பரவு திருக்குடமூக்கு நண்ணினார். 1

தேமருவு மலர்ச்சோலைத் திருக்குடமூக் கினிற்செல்வ
மாமறையோர் பூந்தராய் வள்ளலார் வந்தருளத்
தூமறையி னொலி பெருகத் தூரியமங் கலமுழங்கக்
கோமுறைமை யெதிர்கொண்டு தம்பதியுட் கொடுபுக்கார். 2

திருஞானசம்பந்தர் திருக்குடமூக்கினைச்சேர
வருவார்தம் பெருமானை வண்டமிழின் றிருப்பதிக
முருகாகின் றுளமகிழக் குடமூக்கையுகந்திருந்த
பெருமானெம் மிறையென்று பெருகிசையாற் பரவினார். 3

வந்தணைந்து திருக்கீழ்க் கோட்டத்திருந்த வான்பொருளைச்
சிந்தைமகிழ் வுறவணங்கித் திருத்தொண்டருடன் செல்வா
ரந்தணர்கள் புடைசூழ்ந்து போற்றிசைப்ப வவரோடுங்
கந்தமலர்ப் பொழில்சூழ்ந்த காரோணஞ் சென்றடைந்தார். 4

பூமருவுங்கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்த
மாமகந்தானாடுதற்கு வந்து வழி படுங்கோயி
லாமருவு மலர்க்கையாற் றொழுதுவலங்கொண்டணைந்து
காமர்கெட நுதல்விழித்தார் கழல்பணிந்து கண்களித்தார். 5

கண்ணாரு மருமணியைக் காரோணத்தாரமுதை
நண்ணாதார் புரமெரித்த நான்மறையின் பொருளானைப்
பண்ணார்ந்த திருப்பதிகம் பணிந்தேத்திப் பிறபதியு
மெண்ணார்ந்த சீரடியாருடன் பணிவுற்றெழுந்தருளி. 6

## ஸ்ரீசம்பந்தஸ்வாமிகள் புராணம்.

பெற்றமேறிப் பலிக்கு வரும் பெருமானமருந்தானங்க
ளூற்றவன்பாற் சென்றெய்தி யுருகு முள்ளத் தொடும்பணிந்து
கற்ற சூதாளியதியாங் கடனுமுடித்தே கருதாரூர்
செற்றசிலையார் திருக்குடந்தையடைந்தார் வந்தசிலநாளில் 7.

இருளாரு மணிகண்ட ரடியார்க்கின் னமுதளிக்கப்
பொருளாய மெய்துதற்குப் புகழ்க்குடந்தை யம்பலத்தே
யுருளாயச் சூதாடி யுறு பொருள் வென்றன நம்ப
ரருளாகவே கொண்டங் கமுது செய்வித்தின்புறுவார். 8

ஸ்ரீமூர்க்கநாயனார் புராணம்.

---



## ஸ்ரீஆழ்வார்கள் அருளிச்செய்த திருவாய்மொழிகள்.

### ஸ்ரீ திருமங்கைஆழ்வார்.

### ஸ்ரீசாரங்கபாணிப்பெருமாள்.

ஆவியேயமுதே யெனநினைந்து ருகியரவர்பணைமுலை துணையா
பாவியேனுணராதெத்தனை பகலும் பழுதுபோயொழிந்தன நாள்கள்
தூவிசேரன்னம் துணையொடும்புணரும் சூழ்புனல் குடந்தையே தொழுது என்
நாவினாலுய்ய நான்கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம். 1

இற்பிறப்பறியீரிவரவரென்னீ ரின்னதோர் தன்மை யென்றுணரீர்
கற்பகம் புலவர்களைக ளென்றுலகில் கண்டவா தொண்டரைப் பாடும்
சொற்பொருளாளீர் சொல்லுகேன் வம்மின் சூழ்புனல் குடந்தையே தொழுமின்
நற்பொருள்காண்மின்பாடி நீருய்மின் நாராயணாவென்னும் நாமம். 2

அன்றாயர் குலக்கொடியோடணி மாமலர் மங்கையோடன் பளவி—அவுணர்க்
கென்றானு மிரக்கமில்லாத வனுக்குறையுமிடமாவது இரும்பொழில் சூழ்
நன்றாய புனல்நறையூர் திருவாலி குடந்தை தடந்திகழ் கோவல் நகர்
நின்றானிருந்தான் கிடந்தான் நடந்தாற் கிடம்மாமலையாவது நீர்மலையே. 3

வாளாயகண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப
நாணாளும் நின்னைந்து நைவேற்கு ஓ! மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தைநகராளா! வரையெடுத்த
தோளாளா! என்றனக்கோர் துணையாளனாகாயே. 4

குயிலாலும் வளர்பொழில்சூழ் தண்குடந்தைக் குடமாடி!
துயிலாத கண்ணிணையேன் நின்னினைந்து துயர்வேனோ
முயலாலுமிளதிங்கே வளையிழந்தேற்கு-இதுநடுவே
வயலாலிமணவாளா! கொள்வாயோ மணிநிறமே. 5

வந்தநாள் வந்தென் நெஞ்சிடங் கொண்டான்
மற்றோர் நெஞ்சறியான் அடியேனுடைச்
சிந்தையாய் வந்து தென்புலர்க் கென்னைச்
சேர்கொடா னிதுசிக்கெனப் பெற்றேன்
கொந்தலாம் பொழில்சூழ் குடந்தைத்தலைக்
கோவினை குடமாடிய கூத்தனை
எந்தையை யெந்தை தந்தைதம்மானை
எம்பிரானை யெத்தால் மறக்கேனே. 6

பேரானைக் குடந்தைப்பெருமானை இலங்கொளிசேர்
வாரார் வனமுலையாள் மலர்மங்கை நாயகனை
ஆராவின்னமுதைத் தென்னழுந்தையில் மன்னிநின்ற
காரார் கருமுகிலைக் கண்டுகொண்டு களித்தேனே. 7

வந்தாயென் மனத்தே வந்து நீ புகுந்தபின்னை
எந்தாய் போயறியா யிதுவேயமையாதோ
கொந்தார் பைம்பொழில்சூழ் குடந்தைக் கிடந்துகந்த
மைந்தா! உன்னை யென்றும் மறவாமைப் பெற்றேனே. 8

தோடவிழ் நீலமணங்கொடுக்கும் சூழ்புனல்சூழ் குடந்தைக் கிடந்த
கேடர் கொலென்று தெரிக்கமாட்டேன் செஞ்சுடராழியும் சங்குமேந்தி
பாடகமெல்லடியார்வணங்கப்பன்மணிமுத்தொடிலங்குசோதி
ஆடகம்பூண்டொரு நான்குதோளு மச்சோ வொருவரழகிய வா. 9



வரினையாரமுதம் தந்த வள்ளலை
தேனை நீள்வயல் சேறையில் கண்டுபோய்
ஆனைவாட்டியருளு மமரர்தம்
கோனை யாம்குடந்தைச் சென்று காண்டுமே. 10

173299 600 008.

இங்கே போதுங் கொலோ
இனவேல் நெடுங்கண் களிப்ப
கொங்கார்சோலைக் குடந்தைக் கிடந்தமால்
இங்கேபோதும் கொலோ. 11

அண்டத்தின் முகடழுந்த அலைமுந்நீர்த்திரைததும்ப ஆவாவென்று
தொண்டர்க்கு மமரர்க்கும் முனிவர்க்கும் தானருளி உலகமேழும்
உண்டொத்த திருவயிற்றினகம்படியில் வைத்தும்மையுய்யக்கொண்ட
கொண்டல்கைமணிவண்ணன் தண்குடந்தை நகர்பாடி யாடீர்களே. 12

மூவரில் முதல்வனாய வொருவனை யுலகங்கொண்ட
கோவினைக்குடந்தைமேய குருமணித்திரளை இன்பப்
பாவினைப் பச்சைத்தேனைப் பைம்பொன்னை யமரர்சென்னிப்
பூவினை புகழும்தொண்டரென்சொல்லிப் புகழ்வர்தாமே. 13

காவியை வென்றகண்ணார் கலவியே கருதி நாளும்
பாவியேனாகவெண்ணி யதனுள்ளே பழுத்தொழிந்தேன்
தூவிசேரன்னமன்னும் சூழ்புனல் குடந்தையானை
பாவியேன் பாவியாது பாவியேனாயினேனே. 14

பொங்கார்மென்னிளங் கொங்கைபொன்னே பூப்பப்
பொருகயல் கண்ணீ ரரும்பப்போந்து நின்று
செங்காலமடப்புறவம்பெடைக்குப் பேசும்
சிறுகுரலுக்குடலுருகிச்சிந்தித்து ஆங்கே

தண்காலும் தண்குடந்தை நகரும் பாடித்
தண்கோவலூர் பாடியாடக் கேட்டு
நங்காய் நங்குடிக்கிதுவோ நன்மையென்ன
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே. 15

முற்றாராவனமுலையாள் பாவைமாயன்
மொய்யகலத்துள்ளிருப்பாளஃதும் கண்டு
அற்றாள் தன்நிறைவழிந்தாளாவிக்கின்றாள்
அணியரங்கமாடுதுமோ தோழீயென்னும்
பெற்றேன்வாய்ச் சொல்லிறையும் பேசக்கேளாள்
பேர்பாடித் தண்குடந்தை நகரும்பாடி
பொற்றாமரைக்கயம் நீராடப்போனாள்
பொருவற்றாளென்மகளும் பொன்னுமஃதே. 16

அன்றாயர் குலமகளுக்கரையன்றன்னை
அலைகடலைக் கடைந்தடைத்தவம்மான்றன்னை
குன்றாத வலியரக்கர் கோனைமாளக்
கொடுஞ்சிலைவாய்ச் சரந்துரந்து குலங்களைந்து
வென்றானைக் குன்றெடுத்த தோளினானை
விரிதிரைநீர் விண்ணகரம் மருவினாளும்
நின்றானைத் தண்குடந்தைக் கிடந்த மாலை
நெடியானை யடிநாயேன் நினைந்திட்டேனே. 17

---

## ஸ்ரீ பூதத்தாழ்வார்.

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளும் தண்பொருப்பு வேலை—தமருள்ளும்
மாமல்லைகோவல் மதிட்குடந்தை யென்பரே
ஏவல்ல வெந்தைக்கிடம். 1



எங்கள்பெருமானிமையோர்தலைமகன் நீ
செங்கணெடுமால் திருமார்பா—பொங்கு
படமூக்கிலாயிரவாய்ப் பாம்பணைமேல் சேர்ந்தாய்
குடமூக்கில் கோயிலாக்கொண்டு. 2

## ஸ்ரீபேயாழ்வார்.

---

சேர்ந்ததிருமால் கடல் குடந்தை வேங்கடம்
நேர்ந்தவென் சிந்தை நிறைவிசும்பும்—வாய்ந்த
மறைபாடகமனந்தன் வண்டுழாய்க்கண்ணி
இறைபாடி யாயவிவை. 1

விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம்
மண்ணகரம் மாமாட வேளுக்கை—மண்ணகத்த
தென்குடந்தைத்தேனார் திருவரங்கம் தென்கோட்டி
தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு. 2

## ஸ்ரீ திருமழிசை ஆழ்வார்.

---

இலங்கைமன்னனைந்தொடைந்து பைந்தலைநிலத்துக
கலங்க அன்று சென்று கொன்று வென்றிகொண்ட வீரனே
விலங்குநூலர் வேதநாவர் நீதியான கேள்வியார்
வலங்கொளக்குடந்தையுள் கிடந்தமாலுமல்லையே. 1

சங்குதங்கு முன்கைநங்கை கொங்கைதங்கலுற்றவன்
அங்கமங்க வன்றுசென்று அடர்த்தெறிந்த ஆழியான்
கொங்குதங்குவார்குழல் மடந்தைமார் குடைத்தநீர்
பொங்குதண்குடந்தையுள் கிடந்த புண்டரீகனே. 2

மரம்கெட நடந்தடர்த்து மத்தயானை மத்தகத்து
உரம்கெடப்புடைத்தொர் கொம்பொசித்துகந்த வுத்தமா!
துரங்கம் வாய்பிளந்து மண்ணளந்தபாத! வேதியர்
வரம்கொளக் குடந்தையுள் கிடந்த மாலுமல்லையே! 3

சாலிவேலிதண்வயல் தடங்கிடங்குபூம்பொழில்
கோலமாட நீடு தண்குடந்தை மேயகோவலா
காலநேமிவக்கரன் கரன் முரன் சிரம்மவை
காலனோடுகூடவிற் குனித்த விற்கை வீரனே. (4)

செழுங்கொழும் பெரும்பனி பொழிந்திட—உயர்ந்தவேய்
விழுந்துலர்ந்தெழுந்து விண்புடைக்கும் வேங்கடத்துள் நின்று
எழுந்திருந்து தேன்பொருந்து பூம்பொழில்தழைக்கொழும்
செழுந்தடங்குடந்தையுள் கிடந்த மாலுமல்லையே? (5)

நடந்தகால்கள்நொந்தவோ? நடுங்ஞாலம் ஏனமாய்
இடந்தமெய்குலுங்கவோ? விலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால்பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவாறெழுந்திருந்து பேசு வாழி கேசனே! (6)

நாகத்தானைக் குடந்தை வெஃகாத்திருவெவ்வுள்
நாகத்தணையரங்கம் பேரன்பில்—நாகத்
தணைப்பாற்கடல்கிடக்கு மாதிநெடுமால்
அணைப்பார் கருத்தனாவான். (7)

அங்கமாறும் வேதநான்கு மாகிநின்றவற்றுளே
தங்குகின்ற தன்மையாய்! தடங்கடல் பணத்தலை
செங்கணாகணைக்கிடந்த செல்வமல்குசீரினாய்
சங்கவண்ணமன்னமேனி சார்ங்கபாணியல்லையே. [8]

## ஸ்ரீசக்கரபாணிபெருமாள்.

தூய்மை யோகமாயினாய துழாயலங்கல்மாலையாய்!
ஆமையாகியாழ்கடல் துயின்றவாதிதேவ! நின்
நாமதேயமின்னதென்ன வல்லமல்லவாகிலும்
சாமவேதகீதனாய சக்கரபாணியல்லையே. [9]



## ஸ்ரீபெரியாழ்வார்.

தூநிலாமுற்றத்தே போந்து விளையாட
வானிலா அம்புலீ! சந்திரா வாவென்று
நீநிலா நின்புகழா நின்ற ஆயர்தம்
கோநிலாவக் கொட்டாய் சப்பாணி
குடந்தைக் கிடந்தானே! சப்பாணி 1

ஆலத்திலையான் அரவினணை மேலான்
நீலக்கடலுள் நெடுங்காலம் கண்வளர்ந்தான்
பாலப்பிராயத்தே பார்த்தற்கு அருள்செய்த
கோலப்பிரானுக்கு ஓர் கோல் கொண்டுவா
குடந்தைக் கிடந்தாற்கு ஓர் கோல் கொண்டுவா. 2

காரார் கடலையடைத்திட்டு இலங்கைபுக்கு
ஓராதான் பொன்முடி ஒன்பதோடொன்றையும்
நேராயவன் தம்பிக்கே நீளரசீந்த
ஆராவமுதனைப்பாடிப் பற அயோத்தியர்வேந்தனைப்பாடிப்பற

குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல எம் கோவே!
மடங்கொள் மதிமுகத்தாரை மல்செய்யவல்ல என்மைந்தா!
இடந்திட்டு இரணியன் நெஞ்சை இருபிளவாக முன்கீண்டாய்
குடந்தைக்கிடந்த எய்கோவே! குருக்கத்திப்பூச்சூட்டவாராய்

கொங்குங்குடந்தையும் கோட்டியூரும்பேரும்
எங்கும் திரிந்து விளையாடும் என் மகன்
சங்கம் பிடிக்கும் தடக்கைக்குத்தக்க நல்
அங்கமுடையதோர் கோல் கொண்டுவா
அரக்கு வழித்ததோர் கோல் கொண்டுவா. (5)

## ஆண்டாள் திருமொழி.

பாலாலிலையில் துயில்கொண்ட பரமன் வலைப்பட்டிருந்தேனை
வேலால்துன்னம்பெய்தாற்போல்வேண்டிற்றெல்லாம்பேசாதே
கோலால்நிரைமேய்த்த ஆயனாய்க் குடந்தைக்கிடந்தகுடமாடி
நீலார்தண்ணந்துழாய் கொண்டு என்னெறிமென்குழல்மேல்
சூட்டீரே.

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
## திருவெழுகூற்றிருக்கை.
### தேசியராகம்-ஆதிதாளம்.

ஒருபேருந்தி யிருமலர்த்தவிசில்
ஒருமுறையயனை யீன்றனை ஒருமுறை
இருசுடர்மீதினி லியங்கா மும்மதி
ளிலங்கையிருகால் வளைய ஒருசிலை
யொன்றியவீரெயிற் றழல்வாய்வாளியி
லட்டனை மூவடி நானிலம்வேண்டி
முப்புரிநூலொடு மானுரியிலங்கு
மார்வினில் இருபிறப் பொருமாணாகி
ஒருமுறையீரடி மூவுலகளந்தனை
நாற்றிசைநடுங்க வஞ்சிறைப்பறவை
யேறி நால்வாய் மும்மதத்திருசெவி
யொருதனிவேழத் தரந்தையை ஒருநா
ளிருநீர்மடுவுள் தீர்த்தனை முத்தீ
நான்மறைஐவகை வேள்வி அறுதொழி
லந்தணர்வணங்கும் தன்மையை ஐம்புல
னகத்தினுள்செறுத்து நான்குடனடக்கி
முக்குணத்திரண்டவை யகற்றி ஒன்றினி
லொன்றிநின்று ஆங் கிருபிறப்பறுப்போ



ரறியும்தன்மையை முக்கண்நாற்றோ
ளைவாயரவோடு ஆறுபொதிசடையோ
னறிவரும்தன்மைப் பெருமையுள்நின்றனை
ஏழுலகெயிற்றினில் கொண்டனை கூறிய
வறுசுவைப்பயனு மாயினை சுடர்விடு
மைம்படையங்கையு ளமர்ந்தனை சுந்தர
நாற்றோள்முந்நீர் வண்ண நின்னீரடி
யொன்றியமனத்தால் ஒருமதிமுகத்து
மங்கையரிருவரு மலரன அங்கையில்
முப்பொழுதும்வருட வறிதுயிலமர்ந்தனை
நெறிமுறைநால்வகை வருணமுமாயினை
மேதகுமைம்பெரும் பூதமும்நீயே
அறுபதமுரலும் கூந்தல்காரணம்
ஏழ்விடையடங்கச் செற்றனை அறுவகைச்
சமயமுமறிவரு நிலையினை ஐம்பா
லோதியையாகத் திருத்தினை அறமுதல்
நான்கவையாய் மூர்த்திமூன்றாய்
இருவகைப்பயனா யொன்றாய்விரிந்து
நின்றனை குன்றா மதுமலர்ச்சோலை
வண்கொடிப்படப்பை வருபுனல்பொன்னி
மாமணியலைக்கும் செந்நெலொண்கழனித்
திகழ்வனமுடுத்த கற்போர்புரிசை
கனகமாளிகை நிமிர்கொடிவிசும்பி
லிளம்பிறைதுவக்கும் செல்வம்மல்குதென்
திருக்குடந்தை அந்தணர் மந்திரமொழியுடன்
வணங்க ஆடர வமளியிலறிதுயி
லமர்ந்தபரம நின் னடியிணைபணிவன்
வருமிடரகல மாற்றோவினையே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

இடங்கொண்ட நெஞ்சத் திணங்கிக் கிடப்பன என்றும்பொன்னித்
தடங்கொண்ட தாமரை சூழும் மலர்ந்ததன் பூங்குடந்தை
விடங்கொண்ட வெண்பல் கருந்துத்திச் செங்கட் டழலுமிழ்வாய்
படங்கொண்ட பாம்பணைப் பள்ளிகொண் டான்திருப் பாதங்களே.

---

இன்றுரென்றறியேன்
அன்னையாழியோடும்
பொன்னார் சார்ங்கமுடையவடிகளை
இன்றுரென்றறியேன் [1]

---

## ஸ்ரீ நம்மாழ்வார்.

### தந்யாசிராகம்-ஆதிதாளம்.

ஆராவமுதேயடியேனுடலம் நின்பாலன்பாயே
நீராயலைந்துகரையவுருக்குகின்றநெடுமாலே
சீரார்செந்நெல்கவரிவீசும் செழுநீர்த்திருக்குடந்தை
ஏரார்கோலம்திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே. [1]

எம்மானேயென்வெள்ளைமூர்த்தி யென்னையாள்வானே
எம்மாவுருவும்வேண்டுமாற்றா லாவாயெழிலேறே
செம்மாகமலம்செழுநீர்மிசைகண்மலரும்திருக்குடந்தை
அம்மாமலர்க்கண்வளர்கின்றானே யென்நான்செய்கேனே. [2]

என்நான்செய்கேன்யாரேகளைக ணென்னையென்செய்கின்றாய்
உன்னாலல்லால்யாவராலு மொன்றும்குறைவேண்டேன்
கன்னார்மதிள்சூழ்குடந்தைக்கிடந்தா யடியேனருவாணாள்
சென்னாளெந்நாளந்நாளுனதாள் பிடித்தேசெலக்காணே. [3]



செலக்காண்கிற்பார்காணுமளவும்செல்லும்கீர்த்தியாய்
உலப்பிலானே யெல்லாவுலகுமுடையவொருமூர்த்தி
நலத்தால்மிக்கார்குடந்தைக்கிடந்தா யுன்னைக்காண்பான்நான்
அலப்பாய் ஆகாசத்தைநோக்கி யழுவன்தொழுவனே. [4]

அழுவன்தொழுவனாடிக்காண்பன் பாடியலற்றுவன்
தழுவல்வினையால்பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்
செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய் செந்தாமரைக்
கண்ணா
தொழுவனேனையுனதாள் சேரும்வகையேசூழ்கண்டாய். [5]

சூழ்கண்டாயென்தொல்லைவினையறுத் துன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே தூராக்குழிதூர்த்தெனைநாளகன்றிருப்பன்
வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய் வானோர்கோமானே
யாழினிசையேயமுதேயறிவின் பயனேயரியேறே. [6]

அரியேறேயென்னம்பொற்சுடரே செங்கட்கருமுகிலே
எரியேபவளக்குன்றே நாற்றோளெந்தாயுனதருளே
பிரியாவடிமையென்னைக்கொண்டாய் குடந்தைத்திருமாலே
தரியேனினியுன்சரணந்தந்தென்சன்மங்களையாயே. [7]

களைவாய்துன்பங்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்
வளைவாய்நேமிப்படையாய் குடந்தைக்கிடந்தமாமாயா
தளராவுடலமெனதாவி சரிந்துபோம்போது
இளையாதுனதாளொருங்கப்பிடித்துப் போதவிசைநீயே. [8]

இசைவித்தென்னையுன்தாளிணைக்கீ ழிருத்துமம்மானே
அசைவிலமரர்தலைவர்தலைவா ஆதிப்பெருமூர்த்தி
திசைவில்வீசும்செழுமாமணிகள் சேரும்திருக்குடந்தை
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய் காணவாராயே [9]

வாராவருவாய்வருமென்மாயாயாமாமூர்த்தியாய்
ஆராவமுதாயடியேனாவி யகமேதித்திப்பாய்
தீராவினைகள்தீரவென்னையாண்டாய் திருக்குடந்தை
ஊரா உனக்காட்பட்டு மடியேனின்னமுழல்வேனோ. [10]

உழலையென்பில்பேய்ச்சிமுலையூ டவளையுயிருண்டான்
கழல்களவையேசரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன்
குழலில்மலியச்சொன்ன வோராயிரத்துளிப்பத்தும்
மழலைதீரவல்லார்காமர் மானேய்நோக்கியர்க்கே. [11]

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

---

ஆராவமுதமாய் அல்லாவி யுள்கலந்த
காரார்கருமுகில்போல் என்னம்மான் கண்ணனுக்கு
நேராவாய்செம்பவளம் கண்பாதம் கைகமலம்
பேரார நீள்முடிநாண் பின்னும் இழைபலவே. [12]

தொல்லையஞ்சோதி நினைக்குங்கால்
என்சொல்லளவன்று இமையோர்தமக்கும்
எல்லைஇல்லாதனகூழ்ப்புச்செய்யும்
அத்திரம்கிற்க எம்மானை கொண்டான்

அல்லிமலர் தண்துழாயும் தாரான்
ஆர்க்கு இடுகோ இனிப்பூசல்? சொல்லீர்
வள்ளிவயல் சூழ் குடந்தை
மாமலர்கண் வளர்கின்றமாலே. [13]

மடந்தையர் வாழ்த்தலும் மருதரும் வசுக்களும்
தொடர்ந்து எங்கும் தோத்திரம் சொல்லினர் தொடுகடல்
கிடந்த எங்கேசவன் கிளரொளிமணிமுடி
குடந்தை எங்கோவலன் குடியடியடியார்க்கே. [14]



போரவிட்டிட்டு என்னை நீ புறம்போக்கலுற்றால் பின்னையான்
ஆரைக்கொண்டு எத்தையந்தோ! எனதென்பதென்? யானென்பதென்?
தீர இரும்புண்ட நீரதுபோல் என்னாருயிரை
ஆரப்பருக எனக்கு ஆராவமுதானாயே. [15]

எனக்கு ஆராவமுதாய் எனதாவியை இன்னுயிரை
மனக்காராமை மன்னிஉண்டிட்டாய் இனியுண்டொழியாய்
புனக்காயா நிறத்த புண்டரீகக்கண் செங்கனிவாய்
உனக்கேற்கும் கோலமலர்ப்பாவைக்கன்பா! என்னன்பேயோ!

---

## கும்பகோண க்ஷேத்திரம்.

# ஆதிவரலாறு.

---

ஆதிகாலத்தில் உலகசிருஷ்டி கர்த்தாவாகிய சதுர்முக பிரும்மா, கீழ்நோக்கிய கண்களுடனும், வாடின வதனத்துடனும், நவரத்னகசிதமான மண்டபத்தில், பார்வதிதேவியுடனும், பிரமதகணங்களோடும் திருக்கொலுவில் வீற்றிருக்கும் பரமசிவனிடம் பின்வருமாறு விண்ணப்பம் செய்துகொண்டார்:-“ஸர்வேசா, மகாபிரளயம் சமீபித்து விட்டதே உலகமெல்லாம் அழிந்துவிடுமே. யான் சிருஷ்டிசெய்ய என்செய்வேன்.” உமாபதி பிரும்மாவைப்பார்த்து “தாங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். இமயமலைக்குத் தெற்கே தண்சேரை என்ற இடத்திற்போய் மண் எடுத்து அமிர்தம் விட்டு பிசைந்த மண்ணால் செய்யப்பட்ட ஒரு குடத்தில் ஜகத்சிருஷ்டி பீஜங்களையும், வேதம், ஸ்மிருதி, இதிஹாசம் முதலியவைகளையும் வைத்து அமுதம் விட்டு நிறப்பி அக்கலசத்தை நால்சுத்தி

மாவிலை, தேங்காய், பூநூல், தர்ப்பை, சந்தனம் இவைகளால் அலங்கரித்து வில்வார்ச்சனைசெய்து, மகாமேருபர்வதத்தின் தென்பால் ஓர் உறியின்மீது வைத்துவிடும் அவ்வுறி பிரளயத்தில் அழியாது உலகசிருஷ்டிக்குக்காரணபூதமாகும்." என்று திருவாய்மலர்ந்தருளினார். பிருமதேவன் சிவாஞ்ஞை பிரகாரம் செய்தார். எங்கு பார்த்தாலும் வெள்ளம் பிரவாஹிக்க ஆரம்பித்துவிட்டது. மழை தாரை தாரையாய் பொழிய ஆரம்பித்தது. சண்டமாருதம் பிரசண்டமாய் வீச ஆரம்பித்தது. அண்டசராசரங்கள் அனைத்தும் அழிந்தன. அலைகளாலும், வாயுபகவானாலும், அலக்கப்பட்ட உறி தென்திசையை நோக்கி மிதந்து வந்தது. அதன்மேலிருந்த தெர்ப்பையும், மாவிலையும் கீழே ஓர் இடத்தில் வீழ்ந்தது. அவ்விடம்தான் திருப்புரம்பயம். தர்ப்பை சமிவனேசர் என்னும் ஓர் லிங்கமாக மாறிற்று. மாவிலை வன்னிமரமாகிவிட்டது லிங்கத்தை ஸப்தகன்னியர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். கும்பமோ அத்தலத்திற்கு மூன்று மைலுக்கப்பால் தங்கிற்று. மகாக்ஷேத்திரம் இது என்று ஓர் அசரீர்வாக்கு உண்டாயிற்று. தேவர்கள் மலர்மாரி சொரிந்தார்கள். கலசம் பூமியில் தங்கிற்று. பிரும்மா ஆச்சரியப்பட்டார்.

குடத்திற்கு சற்று கீழ் திசையில் உறி விழுந்தது. அதுதான் சோமநாதன். அதன் கிழக்கே வில்வம் விழுந்தது. இதுதான் வில்வக்காட்டிலிருக்கும் நாகேசவரன். கலசத்தின்மேலிருந்த தேங்காய் ஓர் லிங்கமாக செவ்விளநீர் மரத்தடியில் தோன்றிற்று. அமுதநாதர் என்கிற அபிமுகேசர் இவர்தான். கலசத்தின்மேலிருந்த பூநூல் ஓர் லிங்கமாக மாறிவிட்டது. இவரை கௌதமேசுவரர் என்று கூப்பிடுகிறார்கள்.

சிவபிரான் வேடவேஷம் பூண்டு அக்கும்பத்தைப் பார்க்க விரும்பி சகல பரிவாரங்களுடன் மத்யார்ச்சுனத்துக்கு கிழ்பக்கம் வந்து மேற்றிசையை நோக்கி அம்பு எறிந்தார். சமீபத்திலிருந்த ஓர் ஐயனார் இந்த அம்பினால் குடத்தையுடைக்கும்படி வேண்டினார். அவ்வம்பு கலசத்தை பேதிக்கவில்லை. பரமசிவன் அவரை ஏகபாணசாஸ்தா என்று கூப்பிட்டார்.



பாணவண்டுரை என்னுமிடத்தில் இருக்கும்படிக்கும் கட்டளையிட்டார். பிறகு கிராதரூபியாகிய ஈசன் இடைபாணபுரி என்னும் இடத்திலிருந்து கலசத்தை உடைத்தார். கும்பத்தின் மூக்கு குடவாயிலில்போய் விழுந்தது. கடவுள் கோணேஸ்வரர் என்ற நாமத்துடன் வீற்றிருக்கிறார். உடைந்த மூக்கின் வழியாக அமுதம் நாலாபக்கத்திலுள்ள பூமியை நனைத்தது. அமுதம் நனைத்த பூமிக்கு பஞ்சக்குரோசம் என்று பெயர். அமுதம் தங்கிய தடாகங்களுக்கு பொற்றாமரை, கன்யா தீர்த்தம் என்று பெயர்.

வெள்ளம் வடிந்தவுடன் அமுதத்தால் நனைந்த மண்ணை சேர்ப்பித்து கலசத்தின்மேல் ஓர் லிங்கமாக செய்து பிரமன், இந்திரன் முதலான தேவர்கள் முன்னிலையில் பரமசிவன் லிங்கத்துடன் சேர்ந்து மறைந்தார்.

உலகக்ஷேமத்திற்காக தேவர்கள் மங்களநாயகியை ஈசனுடைய இடது பக்கத்தில் வைத்தார்கள். இவைகளெல்லாம் மாசி மாதத்தில் நடைபெற்றன. பிரும்மா ஆலயாதிகள்கட்டி சகல தேவர்களோடு உற்சவம் நடத்த ஆரம்பித்தார். அப்பிருமோற்சவம்தான் இப்பொழுதும் நடந்துவருகிறது பிரும்மா ஆதிகும்பேசுவரரை அச்சமயம் அடியிற்கண்ட வரங்களைக் கேட்டார்.

1. அனைவருக்கும் கும்பேசுவரருடைய தரிசனம் சகல அபீஷ்டங்களையும் கொடுக்கவேணும்.

2. பிரதோஷதரிசனம் கைலாசத்தையும், கிருத்திகை ஸோமவாரத்தில் வில்வார்ச்சனையும், நெய்தீபமும், சிவஸாயுஜ்யத்தையும் அளிக்கவேண்டும்.

3. மாசிமாத மகஸ்நானம் பிரும்மஹத்திதோஷத்தை போக்கவேணும்.

4. மகஸ்நானத்திற்கு 12 தப்தகிருச்சிர பலன்கள் ஏற்படவேணும்.

5. மகாமக உற்சவத்திற்கு ஒரு வருடம் முந்தியே தேவர்கள் கும்பகோணம் வரவேண்டும்.

6. யாத்திரிகர்கள் பதினுயிரம் அசுவமேதபலனை அடையவேண்டும். சந்திரசூடன் "அங்ஙனமே ஆகுக" என்று வாக்களித்தார்.

அமுதம் பரவி பற்பல க்ஷேத்திரங்கள் ஏற்பட்டதாலும், பரமசிவன் உடைந்த குடத்தின்மேல் மண்ணைப்பிடித்து இலிங்கமாக வைத்து பூஜை செய்ததாலும் கும்பகோணம் என்று பெயர் உண்டாயிற்று.

இத்தலத்திற்கு பாஸ்கரக்ஷேத்திரம் என்றும் பெயர் உண்டு, மலை அல்லது நதியின் அருகாமை மும்மூர்த்திகளின் சான்னித்தியம். அவர்கள் சூரியனால் பூஜிக்கப்படுதல். இம் முக்குணம்பொருந்திய க்ஷேத்திரம்தான் பாஸ்கரக்ஷேத்திரம் என்று புராணம் கூறுகின்றது.

க்ஷேத்திரம் என்றால் என்ன? அது ஒரு புண்ணிய பூமி. அதன் அங்கங்கள் யாவை? பிரும்மா, விஷ்ணு, ருத்திரர்வாசம் செய்யவேணும். புண்ணிய தீர்த்தங்கள் இருத்தல்வேண்டும். மகரிஷிகள் தவம்செய்து ஈசுவர சாக்ஷாத்காரத்தை அடைந்திருக்கவேண்டும். கும்பகோணம் எல்லா இலக்ஷணங்களையும் அடைந்திருக்கிறது.

## ஆலயங்கள்.

1. கன்னியா தீர்த்தக்கரையின் வடபக்கத்தில் வீற்றிருக்கும் நவகன்னியர்களோடு கூடிய காசிவிசுவநாதரை தரி



சித்தமாத்திரத்தில் சகல அபீஷ்டங்கள் கைகூடுகின்றன. சகல மூர்த்திகளை பார்த்த பலன் சித்திப்பதுடன் சுவர்க்க வாஸமும் ஏற்படுகிறது.

2. கீழ்கரையில் மேற்றிசை நோக்கி இருக்கும் அபிமுக்தேசுவரரை தரிசிப்பவருக்கு மறு ஜன்மமில்லை.

3. மேல்கரையில் இருக்கும் கௌதமேசுவரர் ஜன்மஸாபல்யத்தையும், குபேர சம்பத்தையும் பக்தர்களுக்கு அளிக்கிறார்.

4. வில்வவனத்தில் நாகேசுவரர் மகாமக குளத்தின் வடமேற்கு மூலையில் இருக்கிறார். சிவஸாயுஜ்யம் அவரை தரிசிப்போருக்கு ஏற்படும்.

5. சோமேசர் நாகேசருக்கு வடமூலையில் இருக்கிறார்.

6. சோமேசருக்கு வடக்கில் ஹேமமுனியின் தவம்சித்தியடைவதின் பொருட்டும், அசுரர்களை ஸம்ஹாரம்செய்யவும் ஸ்ரீதேவியோடும் பூதேவியோடும் சாரங்கபாணி சேஷசாயியாய் இருக்கிறார். அவரை பார்த்தமாத்திரத்தில் பாவம் பறந்தோடுகிறது. விஷ்ணு சாயுஜ்யம் ஏற்படுகிறது. மகர ஸங்கராந்திதினம் பொற்றாமரை ஸ்நானம் விசேஷம்.

7. ஆராவமுதனுக்கு நேர் மேற்கில் ஆதிகும்பேசுவரர் இருக்கிறார். கடும்தவம் செய்திருந்தாலொழிய அவர் தரிசனம் ஏற்படாது. வெள்ளிக்கிழமையில் மங்களநாயகியின் தரிசனம் விசேஷம்.

8. கும்பநாதருக்கு தென்மேற்கில் மாலதிவனத்தில் தாமகேது முனிக்கு தரிசனமளித்த ஆதிவிசுவேசுவரர் வீற்றிருக்கிறார்.

9. கும்பேசுவரருக்கு வடக்கில் காவிரியின் தென்கரையில் பூவராஹர் எழுந்தருளியிருக்கிறார்.

10. காசியபருக்கு காட்சி கொடுத்த இலட்சுமி நாராயணர் காவிரி தீரத்தில் இருக்கிறார்.

11. காவிரிக்கு வடபக்கத்தில் மதங்கருக்கருளிய வரதராஜன் வீற்றிருக்கிறார்.

12. காவிரிக்கு தென்கரையில் சூரியனுக்கு அருளிய சக்கிரபாணியாகிய நரசிம்மன் இருக்கிறார்.

சக்கிரபாணிக்கு நேர்கிழக்கில் பாணபுரீசர் ஸாந்நித்தியமாயிருக்கிறார்.

## புராணத்திற்குப் பிந்திய கோவில்கள்.

1. காளத்திநாதன். 2. ராமஸ்வாமி. 3. தேவரதன் 4. சாரநாராயணன். 5. வேதநாராயணன். 6. கோபாலஸ்வாமி

## கும்பகோணத்தின் புண்ணிய தீர்த்தங்கள் 18.

### காவேரிஸ்நான கட்டங்கள்.

1. காசியபதீர்த்தம் (சோலையப்பன் தெரு கீழ்கோடி)

2. கதா தீர்த்தம் (ஓட்டத்துறை)

3. சக்கிரதீர்த்தம் வேதாரண்ணியத்திலிருந்து காசி யாத்திரைபோகும் வழியில் இங்கு தங்கின ஓர் பிராம்மண சிரேஷ்டருடைய தகப்பனாரின் எலும்பு இவ்விடத்தில் தாமரைப்பூவாக மாறிவிட்டது. ஆகையால் காசியை நோக்கி கொண்டு போகப்பட்ட அஸ்தி இங்கு மீண்டும் கொண்டுவரப்பட்டது.



4. ஈசான்ய தீர்த்தம். பக்தபுரி அக்ரகாரம் படித்துறை

5. பிரும்ம தீர்த்தம் (அரசலாறு பிரும்மன் கோவில் துறை)

### தடாகங்கள்.

6. கன்னியா தீர்த்தம் (மகாமக தீர்த்தம்)
7. ஹேமபுஷ்கரணீ (பொற்றாமரை)
8. கௌதமதீர்த்தம். கௌதமேசர்கோவில் பின்புரம்.
9. இந்திர தீர்த்தம்.
10. வியாச தீர்த்தம்.
11. ஸோம தீர்த்தம் சோமேசர்கோவில் தென்புரம்.
12. வராஹ தீர்த்தம். விராகர்கோவில் பின்புரம்.
13. வருண தீர்த்தம்.
14. நாக தீர்த்தம் (நாகேசுவரன் கோவில் சிங்ககிணறு)
15. பாதாளகங்கை (ஸோமநாதன் கோவில் கிணறு)
16. பகவத் தீர்த்தம். ஸ்ரீ சங்கராச்சார்ய படித்துறை
17. இயம தீர்த்தம். தாராசுரம்.
18. சூரிய தீர்த்தம். நாகேஸ்வரர் தெற்குவீதி.

## கும்பகோண க்ஷேத்திர யாத்திரை முறை.

1. பஞ்சக்குரோசம் அஷ்டாதசஸ்தானம் இவைகளின் யாத்திரை.
2. மகாமகஸ்நான விருதம்
3. க்ஷேத்திர ஆலயங்களிலுள்ள மும்மூர்த்திகளின் தரிசனம்

## பஞ்சக்குரோச யாத்திரை.

அமுதத்தால் நனைக்கப்பட்ட பூமிக்கு பஞ்சக்குரோசம், அஷ்டாதச ஸ்தானம் என்று பெயர். இந்த யாத்திரைக்கு

சமமான யாத்திரை இப்பூவுலகில் எங்குமில்லை. யாத்திரையால் யமகிங்கராளுடைய பாதை நீங்குகிறது. இஷ்டங்கள் சித்திக்கின்றன. பாவங்கள் போகின்றன. ஒரேதினத்தில் அஷ்டாதசஸ்தானங்களையும் தரிசிப்போன் பூமிபிரதக்ஷிணம் பண்ணின பலனை அடைகிறான். சிவலோகம் விஷ்ணுலோகம் இவைகளை அடைகிறான்.

பஞ்சக்குரோச க்ஷேத்திரமாவன.

1. திருவிடைமருதூர்
2. திருநாகேசுவரம் உப்பிலியப்பன் கோவில்
3. ருத்திராட்சவனம் என்னும் தாராசுரம்
4. சுவாமிமலை
5. பாடலவன மென்னும் கருப்பூர்

அஷ்டாதசக் குரோசங்கள்.

1. மத்தியார்ஜுனம்
2. திருபுவனம்
3. அம்மாசத்திரம்
4. திருநாகேசுவரம் உப்பிலியப்பன் கோவில்
5. செவ்வியவரம்பை, அய்யாவாடி
6. சிவபுரம்
7. சாக்கோட்டை
8. மருதாநல்லூர்
9. பட்டீசுவரம்
10. திருசத்திமுத்தம்
11. தாராசுரம்
12. திருவலம்சுழி
13. சுவாமிமலை
14. இன்னம்பூர்
15. திருப்புறம்பியம்
16. கொட்டையூர்
17. கருப்பூர்
18. வாணாதுறை.

ஸ்ரீ சாரங்கபாணிப் பெருமாள்.



அயோத்திக்கு அதிபதியான இக்ஷுவாகு என்ற அரசர் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் தபஸ்வி. அவருடைய தபஸ், பக்தி முதலியவற்றைப்பார்த்த மனு என்ற மஹான் தான் ஆத்மார்த்தமாக பூஜைசெய்துவந்த ஸ்ரீரெங்கநாத மூர்த்தத்தை இக்ஷுவாகு அரசருக்கு பரிசாக கொடுத்தருளினர். அந்த ஸ்ரீ ரெங்கநாதப்பெருமாளை இக்ஷுவாகு அரசர் பயபக்தியுடன் பூஜித்து வந்தார்.

கொஞ்சகாலத்திற்கெல்லாம் சூரியபகவானால் மற்றொரு ஸ்ரீரெங்கனை மூர்த்தம் பரிசாகக்கிடைத்தது. இம் மூர்த்தங்கள் இரண்டையும் இரண்டு சம்படத்தில்வைத்து பூஜித்து வந்தார்.

சிலகாலத்திற்குள் இம்மூர்த்தங்கள் இரண்டும் ஒரே சம்படமாக மாறியது. ஆனால் இக்ஷுவாகுவம்சத்தவர்களால் ஆராதிக்கப்பட்டுவந்தது.

பின் வெகுகாலம் கழித்தபின் அயோத்திக்கு அதிபதியாய வந்த சாக்ஷாத் ஸ்ரீராமபிரானால் இந்த பூஜையை விபீஷணருக்கு அளிக்கப்பட்டது.

விபீஷணாழ்வார் எங்குவைத்தாரோ அங்குஎம்பெருமான் வேரூன்றிவிட்டார். என்றகதை எல்லோருக்கும் தெரியுமாதலால் இங்கு விவரிக்காமல் விடுத்துள்ளோம்.

இவ்வாறிருக்க ஒருகாலத்தில் சந்திரன் தனக்குஏற்பட்ட குருசாபத்தை நிவர்த்தித்துக்கொள்ள ஸ்ரீரெங்கநாதரை அடைந்தார். அங்கு ஓர் தடாகமும் அமர்த்தி அதில் தபம் செய்தார் எம்பெருமான் அவருக்கு 'விமோசனம் குடமூக்கில் வந்து கொடுத்தருளுவதாகவும் அங்குள்ள சோமேஸ்வரர் ஆலயத்தினுள்ள தெற்குப்பார்த்த அம்பாள் சன்னதிக்கெதிரில் ஓர்குளம்

இயற்றி அதில் தீர்த்தமாடித் தவம்புரிந்து வரவும் என்று அருளினார்.

அவ்வாறே சந்திரன் குடமூக்கு வந்து ஸ்ரீசோமநாதருக்கெதிரில் சோமதீர்த்தமென்ற பெயர்கொண்ட ஓர் தடாகம் இயற்றி அதன் தென்சரகில் ஓர் வினாயகப்பெருமானைப் பிரதிஷ்டைசெய்து அதனருகில் அமர்ந்து தவம் செய்வது ஸ்ரீ சோமநாதரையும் அம்பாளையும் வணங்கி வந்தார்.

ஒருகாலத்தில் பிருகுரிஷி என்றொருவர் இருந்தார். அவர் யாகசம்ரக்ஷணார்த்தமாக ஓர் சந்தேக நிவர்த்திசெய்து கொள்ள ஏற்பட்ட மாச்சல்யத்தை நிவர்த்தித்துக்கொள்வதற்காக பிரும்மாவிடம் சென்று கேட்டார் பிரும்மா தக்கவிடையளிக்காது பரமசிவனைப்போய் கேளுமென்று அனுப்பிவிட்டார். அவ்வாறே பிருகுரிஷி பரமசிவனை வினவினார். பரமசிவன் மஹாவிஷ்ணுவை கேளும் என்றனுப்பினார். அவ்வாக்ஞைப்படி பிருகுரிஷியானவர் மஹாவிஷ்ணுவிடம் வந்து தன் அபிப்பிராயத்திற்கு உத்தரவு தரவேண்டுமென்று பிரார்த்திக்க ஸ்ரீ மகாவிஷ்ணு மஹரிஷியின் வரவை கவனிக்காததால் ரிஷிக்குக் கோபம்வந்து பகவானை காலால்உதைத்துவிட்டார்.

இவ்வாறுசெய்த மஹரிஷியை ஸ்ரீமகாவிஷ்ணு கோபிக்காமல் தங்கள் கால்கள் நொந்ததோ என்று பரிகசித்தார், மஹரிஷி தான்செய்த தவறுதலை உணர்ந்து தான் செய்தபாபத்திற்கு விமோசனம் வேண்டுமென்று கேட்டார். ஹே! மஹரிஷே உமக்கு மற்றும் சிலகாலம் தவம்செய்ய நேர்ந்துவிட்டது. ஆகையால் நீர் பூலோகத்தில் சென்று குடமூக்கு என்ற ஸ்தலத்திலுள்ள அமுதவாவியாகிய தடாகத்தில் ஸ்நானம்செய்து கொஞ்சநாள் அதன் கரையில் தபஸ்செய்துகொண்டிருந்தால் பிந்தியகாலத்தில்மோக்ஷசாம்ராஜ்யத்தை அடையலாம் என்று வாக்களித்தருளினார்.



அவ்வாறே பிருகுரிஷி கும்பகோணம்என்ற குடமூக்கை அடைந்து அமுதவாவியில் தீர்த்தமாடி பொற்றாமரைவடகரையில் ஹேமரிஷி என்ற நாமகரணத்துடன் தவம்செய்தனர்.

இவையெல்லாம் தெரிந்த லெக்ஷ்மிதேவியார் ஓர் மகரிஷி என்ற பெயருடன் நான் இருக்கும்பொழுது உதைத்ததைப் பார்த்ததால் அப்பாவத்தைப் போக்கிக்கொள்வதை முன்னிட்டு நான் சிலகாலம் தங்களைவிட்டு பிரிய நேர்ந்ததென்று சொல்லிக்கொண்டு ஸ்ரீலெக்ஷ்மிதேவியார் அந்தரத்தியானமாய் புறப்பட்டு இக் கும்பகோணமென்கிற குடமூக்கிற் வந்து பொற்றாமரையில் தீர்த்தமாடி அதிலுள்ள தாமரை புஷ்பத்தில் குழந்தை வடிவமாக பிரகாசிக்கத் தொடங்கினாள். குளக்கரையில் தபஸ் செய்துகொண்டிருக்கும் ஹேமரிஷி அக்குழந்தைப் பருவத்திலுள்ள ஸ்ரீலெக்ஷ்மிதேவியை எடுத்து வளர்த்து வருகிறார்.

பிறகு ஒருகாலத்தில் ஸ்ரீரெங்கத்தில் வீற்றிருந்த ஸ்ரீரங்கநாதப்பெருமானே சூரியவிமானத்தில் ஹேமரிஷியின் தவப்புதல்வி ஸ்ரீகோமளவல்லியை மணந்து ஹேமரிஷிக்கு முக்திகொடுப்பதற்காகவும் சந்தரனின் பாபத்தை பிரும்மா, விஷ்ணு ருத்திரன் மூவரும் சேர்ந்து தீர்த்துவைத்ததாக ஸ்ரீரங்கம் புராணத்திலும், நமது புராணத்திலும் தெரிகிறது. ஆனால் இப் புராணக்கதைக்குப் பொருத்தமாக ஸ்ரீசோமநாதர் சன்னதிக்குப் பக்கத்தில் ஸ்ரீ ரங்கத்திலிருந்து எழுந்தருளிய ஸ்ரீரங்கநாதப்பெருமான் இங்கு ஸ்ரீசாரங்கராஜன் என்றும் ஆராவமுதன் என்றும் நாமகரணங்களுடன் சேஷசயனத்தில் எழுந்தருளியிருக்கிறார்.

நமது ஆராவமுதப்பெருமானை வைணவ சமயாச்சாரியார்கள் எழுவர்கள் அலங்கரித்துப் பாடியிருக்கிறார்கள். இவ்வூரில் பல வைணவஸ்தலங்கள் இருப்பினும் இவரே பாடல் பெற்றவர். பகவான் விமானத்துடன் எழுந்தருளியதாலும். அது சூரிய விமானமானதாலும் சூரியன் கதியைக்கொண்டு உத்தராயணத்தில் விமானத்தின் வடக்கு வாயலிலும், தக்ஷிணாயனத்தில் தெற்குவாயலிலும் திறக்கப்படுகிறது.

இப்பெருமான் சூர்யனுடைய கர்வத்தை அடக்கி சக்கரத்தில் எழுந்தருளி இருக்கிறார். அவ்வுடையாள ரூபமாகவே ஸ்ரீ சக்கரபாணி என்ற நாமகரணத்துடன் சக்கரப் படித்

துறைக்குச் சமீபம் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கிறார். இந்தக்காரணத்தாலேயும் இதற்குப் பாஸ்கர க்ஷேத்திரமென்ற பெயர் வந்தது

இவ்வூரில் பல சைவக்கோயில்கள், வைணவக்கோயில்கள் இருப்பினும் சமயாச்சாரியார்களால் பாடல்பெற்ற ஸ்தலங்கள் அடியில் வருபவைகளே அவைகளாவன:—

ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர், ஸ்ரீசாரங்கபாணிப்பெருமாள், ஸ்ரீநாகேஸ்வரர், ஸ்ரீசோமேசர், அதாவது மூன்று சிவஸ்தலங்களும் ஒரு வைணவஸ்தலமுமே.

திருச்சேறை

## ஸ்ரீ சாரநாதப்பெருமாள்.

இக்குடமூக்கு, குடந்தை, குடந்தைக்காரோணம், குடந்தைக் கீழ்க்கோட்டம் இவைகள் ஏற்படும்முன்னமேயே சதுர்முகன் கடம் செய்வதற்கு மண் எடுத்தது மாகிய தண்சேறை என்ற இடத்தில் எம்பிரான் ஸ்ரீசாரநாதன் என்றும் ஸ்ரீசார பரமேஸ்வரர் என்றும் எழுந்தருளியிருக்கிறார். அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசாரநாதப்பெருமாள் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கநாதருக்கும் முந்திய காலத்தவர். சார க்ஷேத்திரமென்று அதற்குத்தான் சொல்லுகிறார்கள். அதாவது சாரக்ஷேத்திரம், சாரவிமானம், சாரபுஷ்கரணி, சாரநாதர், சாரநாயகி என்று பஞ்சக்ஷேத்திரங்கள் ஒருங்குகூடிய மஹா புண்யமான க்ஷேத்திரம். ஸ்ரீமார்க்கண்டேயர் விஷ்ணுவை பூஜித்தவிடம் இதுவே.

காவிரீ தோயமாச்ரித்ய வாதோயத்ர ப்ரவர்த்ததே
தத்தேச வாஸிநாம் முக்திஹி கிமுத்திர வாஸிநாம்.

என்றபடியுள்ள காவிரியம்மன் இவ்வூர்புஷ்கரணிக்கரையில் தன்னிடம்அடைந்தபாபத்தைப்போக்கிக்கொள்வதற்காக எம்பிரானைக்குறித்து தபஸ்செய்து இப்பெருமான் பாபம் தீர்த்தருளினார் என்ற புராணக்கதை இருக்கிறது பல ஆழ்வார்களால் பாடல்பெற்ற சாரக்ஷேத்திரம். இக்கோலங்கொண்டெழுந்தருளியிருக்கும் ஈசான்யபாகத்தில்தான் ஸ்ரீசாரபரமேஸ்வரர்என்ற திருநாமத்துடன் பரமசிவன் ஞானாம்பாள் சமேதராய் எழுந்தருளியிருக்கிறார். பாடல்பெற்ற சிவஸ்தலம்.

## ஸ்ரீநாகேசர் ஆலயத்தில் ஸ்ரீநடராஜரும் விமானமும்.

ஒரு சமயம் பிரம்மாதி தேவர்கள் கைலயங்கிரியை அடைந்து சர்வேஸ்வர! தங்களால் ஏற்படுத்தப்பட்ட குட



மூக்கு, குடந்தைக் கீழ்க்கோட்டம் காரோணம் என்ற க்ஷேத்திரத்தில் தாங்கள் நடனம் செய்து எங்களுக்கு காக்ஷியளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க அவ்வாறே வருவதாக வாக்களித்தருளினார். பிரும்மாதி தேவர்கள் கும்பகோணத்தை அடைந்து சர்வேசன் வரவை எதிர்நோக்கித் தவம்புரிந்துவந்தனர்.

இவ்வாறு இருக்க முன்னொருகாலத்தில் ஸ்ரீமாருதி சிவபிரானை வாலினால் கட்டி இழுத்த சிவாபராதத்தைப்போக்கிக்கொள்ளுவதை உத்தேசித்தும் இழந்தவாலை அடைவதற்கும் இந்த க்ஷேத்திரத்திற்கு சுமார் 12 மைல் தூரத்தில் குரங்காடுதுறை என்ற க்ஷேத்திரத்தில் இருந்துகொண்டு ஸ்ரீசித்சபேசரைக்குறித்து தபஸ்செய்யலானார்.

அவர் தபசிக்கிரங்கிய கருணைக்கடலாம் இறைவன் தில்லைகாளி, கோவிந்தராஜப்பெருமான உள்ளிட்ட ஸ்ரீவித்சபேசர் சிதம்பரத்திலிருந்து விமானத்துடன் எழுந்தருளி குரங்காடுதுறைசென்று ஸ்ரீஆஞ்சநேயருக்கு வரசித்து அளித்து திரும்புங்கால் இக்குடந்தைக் கீழ்க்கோட்டம்வந்து முன்சொன்ன பிரும்மாதிதேவர்கள் பிரார்த்தித்த வரனை அளித்து விமானத்துடன் வீற்றிருக்கிறார். இப்பெருமானைத்தான் கீழ்க்கோட்டத்துக்கூத்தனே என்று ஸ்ரீதிருநாவுக்கரசுசுவாமிகள் அலங்கரித்துப் பாடியிருக்கிறார்.

ஆராய்ச்சி:—இது சேதுபுராணம் குரங்காடுதுறை புராணம், சிதம்பரபுராணம் முதலியவைகளிலிருந்து ஆராய்ச்சி செய்து எழுதப்பட்டது.

## மகாமக தீர்த்தம்.

முற்காலத்தில் தீர்த்ததேவதைகளாகிய ஒன்பதின்மரும் பரமசிவனிடம் சென்று "சர்வேசா எல்லோரும் தங்கள் பாபங்களைப்போக்க எங்களிடம் நீராடுகிறார்கள். அப்பாபச்சுமைகளை நாங்கள் போக்குவதெப்படி, தயவுசெய்து உபாயம் சொல்லுங்கள். "என்று பிரார்த்தித்தார்கள்". உமாபதி, அவர்களை கும்பகோணத்தில் மகாமக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும்படி கட்டளையிட்டார். அத்தலமிருக்குமிடம்தெரியாதென்று நவகன்னியர்கள் சொல்ல சிவபிரான் அவர்களை காசி க்ஷேத்திரத்திற்கு போகும்படி வாக்களித்தார். பிறகு கைலாஸாதிபதியும் பிரமத கணங்களோடும் கன்னிகைகளுடனும் கும்பகோணம் வந்து சேர்ந்தார்கள். அனைவரும் அமுதஸரஸை கண்டார்கள். ஆனந்தக்கூத்தாடினார்கள். கிழக்கு முகமாக

178299



இந்த அமிர்தகலசத்தின் மேற்கு முகமாக திரும்பினர். கௌதமேசர், அமிர்தகலசநாதர், கும்பேசர், நாகேசர், சோமேசர், விசுவேசுவரர் இவர்களை பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து தீராயபின் தடாகத்திற்கு எதிர்முகமாக கன்னியர்கள் விசுவநாதரோடு எழுந்தருளியிருக்கிறார்கள்.

நவகன்னியர் என்பது தீர்த்த தேவதைகளும் தங்கள் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கி அவற்றில் நீராடுவோர்க்கு அளவற்ற புண்ணியத்தை கொடுக்கிறார்கள். அஷ்டதிக்குபாலகர்கள் தங்கள் பெயராலும் தீர்த்தம் ஏற்படுத்திக்கொண்டார்கள். பிரமன் தன் பெயரால் ஒரு தீர்த்தம் வடதிசையில் உண்டாக்கினர்.

## தீர்த்தங்களின் மகிமை.

அறுபத்தாறுகோடி தீர்த்தங்கள். கொடிய மகாபாதகங்களை தலைப்பதற்கு அமைத்திருக்கின்றன.

இந்திர தீர்த்தம் தேவலோகத்தை அளிக்கும் அக்கினி தீர்த்தம், பாவத்தைக்கொளுத்தும், இயம தீர்த்தம இயமபடாளுடைய துன்பத்தை தவிர்த்துவிடும். நிருதிதீர்த்தம் பூதப்பிரேதபிசாசங்களை விரட்டிவிடும். புத்தியையும், சாயுஜ்யபதவியையும்தரும். வாயுதீர்த்தம் துன்பத்தைப்போக்கும். பிரதம தீர்த்தம் நாரதரோருக்கோமுறையிலுள்ள துன்பங்களைபோக்கும்.

மகாமக தீர்த்தம் மூன்றுகோடி தலைமுறையை கரையேற்றிவிடும். பிரதி தினம் கன்னியா தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் மூன்று சப்தரிஷிகளின் பலனை அடைவதோடு மோக்ஷ ஸாம்ராஜ்யம் ஏற்படுகிறது. நினைத்தகாரியங்கள் கைகூடும். பாவத்தை பஸ்மம் செய்யும். ஈசான தீர்த்தம், கங்கை ஸ்நானத்தைக் கொடுக்கும். மகாமக தீர்த்தம் பதினாயிரம் கங்காஸ்நான பலனை ஒருநிக்ஷத்தில் கொடுக்கும். யமுனை பொன்னை கொடுக்கும் கோதாவரி கல்பகவிருக்ஷம்போல் எண்ணினவையெல்லாம் கொடுக்கும். நர்மதை பாவங்களுக்கு வஜ்ராயுதம் சரஸ்வதி தத்துவ ஞானத்தையும் வைராக்கியத்தையும் தரும், பாவத்தை ஒழிப்பவள் காவிரி, புருஷார்த்தங்களையும் கொடுப்பாள். கன்னியாகுமாரி பதினாயிரம் அசுவமேதஞ்செய்த பலனை கொடுக்கும். காமதேனுவிருக்கும் உலகத்தை அளிக்கும் பாலாறு. சரயுநதித்துன்பங்களைத் தவிர்த்துவிடும். 66-கோடி தீர்த்தங்களும் சர்வதீர்த்தங்களின் பிரயோஜனங்களைக்கொடுக்கும். ஜயம்! ஜயம்!! ஜயம்!!!

நாணயமான சரக்கு! விலை நயம்!!

எங்களிடம் சுத்த கட்டி வெள்ளியில் செய்த எல்லாவித பாத்திரங்களும், பவுன் நகைகளும், சீமைக்கமலம், சிகப்பு வங்கியறு நகைகளும் கிடைக்கும். ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து (தங்கள் இஷ்டப்படி விலை நயமாகவும்) வேலை சுத்தமாகவும் செய்து கொடுக்கப்படும். ஒருமுறை பரீக்ஷியுங்கள்.

N. B:- V. R. சீல் உள்ள பாத்திரங்களையே பார்த்து வாங்குங்கள்.

V. ராஜகோபால அய்யர்,
காசிக்கடை,
பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

கும்பகோணம்
**K. அப்துல்ரஹிமான் ஸாஹிப் & ஸன்ஸ்**
பரிமளச்சாலையாரின்
"சிங்க மார்க்குள்ள"

**சந்தனாதித்தைலம்.**

கோடையின் கொடுமையை தணித்து, மூளைக்கு குளிர்ச்சியைத் தந்து, சிரசு, கண் இவைகளைப்பற்றிய நோய்களைத்தீர்த்தும், கூந்தலை கருநிறமாக்கி வளரச்செய்து உஷ்ணத்தைத் தணித்து சரீர மினுமினுப்பைத்தரும். ஒவ்வொரு குடும்பத்திலும் இது இருக்க வேண்டியது அவசியம்.

**அரைக்கீரைவிதைத்தைலம்.**

இது அநேக பச்சிலைகளுடனும், அரைக்கீரைவிதையும்சேர்த்து தயாரிக்கப்பட்டதை ஒழுங்கின் பிரகாரம் ஸ்நானஞ்செய்துவரின் கண்ணெரிச்சல், பித்தவாய்வு, காதுநோய்அகன்று உஷ்ணந்தணிந்து இந்திரிய நஷ்டத்தையும் பந்தப்படுத்தும். கூந்தலும் வளரும்.

# சுதேசி மார்ட்

## கடைத்தெரு, கும்பகோணம்.

**சுதேசியத்தை ஆதரியுங்கள்** — **ஆதரியுங்கள் சுதேசியத்தை**

நம் தேசத்தின் பொருளாதார உயர்வை கருதுவோமானால் நம் தேசத்திலேயே உற்பத்தி செய்யப்படும் சுதேசி பொருள்களையே நாம் உபயோகிக்கவேண்டும்.

சமீபகாலத்திற்குள் நமக்கு தேவையான சாமான்கள் பெரும்பாலும் நம் தேசத்திலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன. அந்நிய நாட்டு சாமான்களைவிட, விலையிலும், குணத்திலும், உறுதியிலும் சுதேசி சாமான்கள் மேன்பட்டு விளங்குகின்றன என்பதை நமது ஸ்டோருக்கு வந்து பார்வையிட்டால் தெரியவரும்.

வாங்குபவர்களுக்கு எல்லா சாமான்களும் சுதேசியமாகவே எளிதில் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறதால் சுதேசி வியாபாரம் விருத்தி அடைகிறதில்லை இதை உத்தேசித்தே, எல்லா சாமான்களையுஞ் சேகரித்து வைத்திருக்கிறோம். வெண்கலங்கள், சோப்புகள் வெதுவாயம் சோப்பு பெட்டிகளும், இதர நூதன சாமான்களும் பௌண்டன்பேனா, பென்சில், ஸ்டீல்நிப்புகள், இங்கி, பேப்பர், ரப்பர் முதலிய ஸ்டேஷனரி சாமான்களும், கம்பளங்கள், கான்வாஸ்கள், ஹரிக்கேன் விளக்குகள் கண்ணாடி சாமான்கள், பின்கோத்துகள், கனர், லெட்டர்பேப்பர் முதலிய தினசரி உபயோகத்திற்குத் தேவையான சகல சாமான்களும், விசேஷப் பொருள்களும் இதர வகைச் சாமான்களும், பீங்கான் சாமான்கள் Face Powders, Glycerina,etc, சீப்புகள் வெள்ளை நூல், கலர் நூல், பூநூல், Leather Trunk பெட்டிகள் Hair slides முதலிய ஜப்பான் சாமான்களும் ஒருங்கே எங்களிடம் கிடைக்கும்.

N.B. ஒருமுறை எங்கள் ஸ்டோருக்கு விஜயஞ்செய்து பாருங்கள்.

Proprietor R. Sarangapani Iyengar.

